## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 130/2015

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. V. பாண்டியன், Bench Clerk (Gr–III) – I/C அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 10.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சண்முகம் (DW–1) | வயது | : | 70/2025 |
| க/த பெயர் | : | திரு. பக்கிரிசாமி | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) டி.எஸ். 3097 இல் மொத்த விஸ்தீரணம் 2244 என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணம் யார் யாருக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் என்றால் குத்புதின் என்பவர் கமலா என்பவருக்கு 20.03.1997 இல் எழுதி கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் 598 சதுரடி கிரயம் செய்து கொடுத்ததாக காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். 598 சதுரடியை தமிழரசி என்பவர் கிம்ராஜ் மாலி என்பவருக்கு எழுதி கொடுத்தாக பி.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
2) பி.சா.ஆ.14 ஆவணத்தில் 2244 சதுரடியும் குத்புதின் என்பவர் எனது மகன் சத்யநாராயணனுக்கு விற்பனை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே குத்புதின் என்பவர் 598 சதுரடியை பி.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரயம் செய்து கொடுத்த பின்னர் மீண்டும் பி.சா.ஆ.14 ஆவணத்தில் 2244 சதுரடியும் குத்புதின் என்பவர் எனது மகன் சத்யநாராயணனுக்கு விற்பனை செய்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் எனது மகன் சத்யாநாராயணனுக்கு பவர் ஏஜெண்டாக இந்த வழக்கிலும், குத்புதினுக்கு பவர் ஏஜெண்டாகவும் வேறு ஒரு வழக்கிலும் வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரிதான்.
3) பி.சா.ஆ.14 ஆவணம் ஏற்படுவதற்கு முன்பு உள்ள உரிமை மூல ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.14 ஆவணத்தில் ஷேக் என்பவர் உயில் ஆவணம் எற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்வில்லை என்றால் சரிதான். அந்த உயில்

ஆவணத்தில் ஷேக் என்பவருக்கு சொத்துக்கள் எவ்வாறு கிடைத்தது என்று குறிப்பிடாததால் தான் அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்வில்லை என்றால் சரியல்ல.

4) பி.சா.ஆ.14 ஆவணம் ஏற்படுவதற்கு முன்பு 19.01.1940 இல் மன்னார்குடி ஸ்ரீ ஏகாம்பரேஷ்வர் சுவாமி கோவிலில் மற்றும் வாதி குடும்பத்திற்கும் இடையே ஏற்பட்ட பரிவர்த்தனை மற்றும் 1955 இல் வாதி குடும்பத்தில் பாகப்பிரிவினை பற்றிய குறிப்பு எனக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல, கிரயம் பெற்றதற்கு பின்னர் தெரியும். மேற்படி 19.01.1940 இல் ஏற்பட்ட பரிவர்த்தனை மற்றும் 1955 இல் ஏற்பட்ட பாகப்பிரிவினை செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டு, உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து நிலுவையில் உள்ளது. அதற்கான ஆவணங்களும் எதுவும் தாக்கல் செய்யாததால் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5) பி.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணங்களான இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.145/2019 வழக்கில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் வாதிகள் தரப்பினர்கள் அல்ல என்பதால் மேற்படி ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. குத்புதின், அப்துல் வகாப், சத்யநாராணனன் ஆகியோர் எனது குடும்பத்தினருடன் சேரந்து கொண்டு வாதிகளுக்கு தெரியாமல் உயில் ஏற்பட்டதையும் அதன் மூலமாக குத்புதின் சத்யநாராயணனுக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரய சாசனத்திற்கு சட்ட வடிவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக எங்களால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களின் பேரில் பெறப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்றால் சரியல்ல.

6) வாதிகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.129/2015 தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். முழு விசாரணைக்கு பின்னர் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து தொடர்பான மன்னார்குடி சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண். 83/2002 இல் ஏற்பட்ட உத்தரவினை இந்த வழக்கில் ஆவணங்களாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மன்னார்குடி சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண். 83/2002 இல் ஏற்பட்ட உத்தரவினை எதிர்த்து நான் எதுவும் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் மேல்முறையீடு செய்தேன். மேற்கண்ட விபரங்களை மறைத்து 2002 க்கு பின்னர் 1ம் பிரதிவாதி ஸ்ரீராம் சிட்ஸ்ல் தாவா சொத்தை அடமானம் வைத்தேன் என்றால் சரியல்ல.

7) பி.சா.ஆ.7 மற்றும் 8 ஆவணங்களில் முழுமையான விசாரணை எதுவும் மேற்கொள்ளாமல் காலாவதியான காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்து உரிமை சம்பந்தமாக பி.சா.ஆ.7 மற்றும் 8 ஆவணங்களில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.10 ஆவணமான வில்லங்க சான்றிதழ் 1978–1986 வரையிலான

வில்லங்க சான்றிதழ் என்றால் சரிதான். பரிவர்த்தனை மற்றும் குடும்ப பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்ட விபரம் தெரிந்திருந்தும் அந்த விபரங்களை மறைத்து வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8) பி.சா.ஆ.11 ஆவணத்தில் சொத்து விபரங்கள், கதவிலக்கம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.11 ஆவணத்தை சார்பு நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.12 மற்றும் 13 ஆவணங்களான குடிநீர் ரசீது, மின் கட்டண ரசீதுகளை சார்பு நீதிமன்றம் ஏற்றக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனார் வாடகை கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் கணேசன் பெயரில் RCOP.60/87 என்ற வழக்கை தாக்கல் செய்து கணேசனை சொத்திலிருந்து வெளியேற்றிய விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

9) சொத்தின் உரிமை மூலம் இல்லாமல் குத்புதின் உதவியோடு வாதிக்கு சொந்தமான சொத்தை பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்துக்கொண்டு சொத்தினை அபகரிக்க முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மை விபரங்களை மறைத்து பொய்யான தகவலுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வாதியின் சொத்தை அடமானம் வைத்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.12 11:32:45 +0530

District Munsif
Mannargudi.